சிவகங்கை மாவட்ட மற்றும் வட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுக்களில் (Empanelment of Para Legal Volunteers in Police Stations for Missing Children) Scheme –க்கான சட்டத் தன்னார்வலர் சேர்க்கை அறிவிப்பு

சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் இயங்கும் தேவகோட்டை, காரைக்குடி, திருப்பத்தூர், மானாமதுரை, இளையான்குடி, சிங்கம்புணரி மற்றும் திருப்புவனம் வட்ட சட்டப்பணிகள் குழுக்களுக்கு, (Empanelment of Para Legal Volunteers in Police Stations for Missing Children) Scheme –ன் கீழ் சட்ட உதவி மற்றும் சட்ட அறிவை எடுத்துரைப்பதற்காக, சமூகசேவை மனப்பான்மையுடன் பணிபுரிய தன்னார்வலர்களாக (Para Legal Volunteers) தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள்.

சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த சட்டபணிகள் தன்னார்வத் தொண்டர்கள் சேர்க்கைக்கு கீழ்கண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. சமூகசேவை புரியும் சமூக ஆர்வலர்கள் (அரசியல் அமைப்பு சாராத தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள்).
2. உளவியல் அல்லது பிற தொடர்புடைய துறைகள்.

சட்டப்பணிகள் தன்னார்வ தொண்டராக சமூக சேவைமனப்பான்மையுடன், ஊதியமின்றி பணிபுரிய மேற்கண்ட பிரிவுகளில் விருப்பமுள்ளவர்கள் 30-04-2026 ம் தேதிக்குள் சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் தேவகோட்டை, காரைக்குடி, திருப்பத்தூர், மானாமதுரை, இளையான்குடி சிங்கம்புணரி மற்றும் திருப்புவனம் வட்ட சட்டப்பணிகள் குழுக்களின் விண்ணப்பங்களை இணையதளமுகவரி https://district.ecourts.gov.in/Sivagangai என்ற முகவரியில் பதிவிறக்கம் செய்து பாஸ்போர்ட் புகைப்படத்துடன் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். மேலும் ஏற்கனவே சட்ட தன்னார்வலராக தேர்வு செய்யப்பட்டிருந்தால் இந்த Scheme-ல் விண்ணப்பம் செய்ய இயலாது. தங்களுக்கு விருப்பம் இருந்தால் ஏதாவது ஒரு scheme-ல் சட்ட தன்னார்வலராக பணிபுரியலாம் என சிவகங்கை மாவட்ட முதன்மை மாவட்ட நீதிபதியும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசிநாள் 30-04-2026

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: **தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி , மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அலுவலகம், சிவகங்கை-630561.**

DNo. 971/26
15/4/2026

15/4/2026
தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி.
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு.
சிவகங்கை.